RNI-N0: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 117 | மே.4 2026 திங்கள்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# தமிழகம் புதுச்சேரி உட்பட 5 மாநிலங்களில் இன்று வாக்கு எண்ணிக்கை

**சென்னை: மே.4–**

தமிழகம், புதுச்சேரி உள்ளிட்ட 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தல் வாக்கு எண்ணிக்கை இன்று நடைபெறுகிறது. தமிழகத்தில் பாதுகாப்புக்கு 1 லட்சம் போலீஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

தமிழகம் உள்ளிட்ட 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தலுக்கான அறிவிப்பை தேர்தல் ஆணையம் கடந்த மார்ச் 15ம் தேதி வெளியிட்டது. அதன்படி, புதுச்சேரி, கேரளா, அசாமில் கடந்த ஏப்.9ம் தேதியும், தமிழகத்தில் கடந்த ஏப்.23ம் தேதியும் ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடந்தது. மேற்கு வங்கத்தில் ஏப்.23, 29 ஆகிய தேதிகளில் 2 கட்டமாக நடைபெற்றது. அங்கு 2ம் கட்ட தேர்தலில் முறைகேடு புகார்கள் எழுந்ததால், 15 வாக்குச்சாவடிகளில் நேற்று மறு வாக்குப்பதிவு நடத்தப்பட்டது.

இதேபோல, கோவா, குஜராத், கர்நாடகா, மகாராஷ்டிரா, நாகாலாந்து, திரிபுரா ஆகிய 6 மாநிலங்களில் காலியாக உள்ள பேரவைத் தொகுதிகளுக்கு ஏப்.9, 23 ஆகிய தேதிகளில் இடைத் தேர்தல் நடத்தப்பட்டுள்ளது. தமிழகத்தைப் பொருத்தவரை, மொத்தம் 4,023 வேட்பாளர்கள் போட்டியிட்டுள்ளனர். 5.73 கோடி வாக்காளர்களில் 4.88 கோடி பேர் வாக்களித்தனர். இதன்மூலம் 85.10 சதவீத வாக்குப்பதிவு நடந்து, சாதனை படைக்கப்பட்டுள்ளது.

கடந்த 23ம் தேதி மாலை 6 மணிக்கு வாக்குப்பதிவு முடிந்ததும், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் அனைத்தும் சீலிடப்பட்டு, தமிழகம் முழுவதும் வாக்கு எண்ணிக்கை நடைபெற உள்ள 62 மையங்களில் பாதுகாப்பு அறைகளில் (‘ஸ்டிராங் ரூம்’) வைக்கப்பட்டுள்ளன. இங்கு 4 அடுக்கு போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.






இந்நிலையில், 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தல் மற்றும் இடைத் தேர்தல் வாக்கு எண்ணிக்கை இன்று காலை 8 மணிக்கு தொடங்குகிறது. இதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக 5 மாநில தலைமைத் தேர்தல் அதிகாரிகளுடன் தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் இணைய வழியில் ஆலோசனை நடத்தினார்.

தமிழகத்தில் செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் விளக்கினார். ‘‘தமிழகத்தில் 62 மையங்களில் 65 கம்பெனி துணை ராணுவப் படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர். 18 ஆயிரம் போலீஸாரும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். மாநிலம் முழுவதும் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க சுமார் 1 லட்சம் போலீஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தொகுதிக்கு ஒரு வாக்கு எண்ணிக்கை பார்வையாளர் என 234 பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்’’ என்று அவர் தெரிவித்தார்.

முழு அமைதி, பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், தமிழகம் முழுவதும் நாளை மதுக்கடைகளை மூடவும் அவர் உத்தரவிட்டுள்ளார். தமிழகத்தில் வாக்கு எண்ணிக்கை நடைபெறும் 62 மையங்களில் செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள், குடிநீர், கழிவறை, ஒளி, ஒலி வசதிகள், மின் இணைப்பு தொடர்பாக மாவட்ட தேர்தல் அலுவலர்கள், தேர்தல் நடத்தும் அலுவலர்கள் நேற்று ஆய்வு செய்தனர்.

மேற்கு வங்கத்தில் வாக்கு எண்ணிக்கை பாதுகாப்பாக, அமைதியாக, வெளிப்படையான சூழலில் நடைபெறுவதை உறுதி செய்ய 165 கூடுதல் வாக்கு எண்ணிக்கை பார்வையாளர்கள், 77 காவல் பார்வையாளர்களை தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது. தமிழகத்துக்கு அவ்வாறு நியமிக்கப்படவில்லை என தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

## செங்கல்பட்டு: சமூக விரோதிகளின் கூடாரமாகும் மகளிர் சுய உதவிக் குழு கட்டிடங்கள்



செங்கலபட்டு மே. 04-

செங்கலபட்டு ஊராட்சிகளில் சேதமடைந்து செயல்பாடின்றி உள்ள மகளிர் சுய உதவி குழு கட்டிடங்களால் அரசின் நிதி வீணாகிறது. அவற்றில் புதர்மண்டி சமூக விரோத செயல்கள் நடந்து வருகிறது.தமிழகத்தில், மகளிர் சுய உதவிக் குழுக்கள் மாலெ அரசின் பெண்கள் மேம்பாட்டுக் கழகம் மூலம் முதன்முதலில், 1989ம் ஆண்டு தொடங்கப்பட்டது. மகளிர் சுயசார்பு பெற உதவியதால் இக்குழுக்கள் மிக வேகமாக அனைத்து மாவட்டங்களிலும் தொடங்கப்பட்டன. கிராமப்புற பெண்களின் பொருளாதார வளர்ச்சிக்காக அரசு மகளிர் சுய உதவி குழு திட்டத்தை அறிமுகம் செய்தது. இத் திட்டத்தின் மூலம் ஊராட்சிகள் தோறும் பல்வேறு மகளிர் சுய உதவி குழுக்கள் தற் போது செயல்பட்டு வருகின்றன. ஊராட் சிகள் தோறும் மகளிர் சுய உதவி குழுக் களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளிப்பதற்காக கட்டிடங்கள் கட்டப்பட்டன.

இந்த கட்டிடங்களில் மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு தையல் பயிற்சி, கூடை முடைதல், சலவை சோப்பு தயாரித்தல், வீட்டு பராமரிப்புக்கான பினாயில் தயாரிப்பு, சாம்பிராணி, ஊதுபத்தி, சூடம் உள்ளிட்ட பொருட்கள் தயாரிப்பது குறித்து பயிற்சிகள் அளிக்கப்பட்டது. இந்த பயிற் சியை பெற்ற மகளிர் குழுக்கள் குழுவாக சேர்ந்தும் தனித்தனியாக வீடுகளிலும் பொருட்களை உற்பத்தி செய்து அவற்றை அரசு கூட்டுறவு சங்கங்கள் மூலமும் தாங்களாகவும் மக்களுக்கு நேரடியாக விற்பனை செய்து லாபம் ஈட்டி வந்தனர். இதற்கு ஊராட்சிகள் தோறும் கட்டப்பட்டிருந்த மகளிர் சுய உதவி குழு கட்டிடங்கள் மகளிருக்கு உதவியாக அமைந்திருந்தது. இதனிடையே காலப் போக்கில் இக்கட்டிடங்கள் பராமரிப்பின்றி கூரை இடிந்து விழுந்தும் மின் இணைப்பு இன்றியும் சேதமடைந்த நிலையில் உள்ளன. பல ஊராட்சிகளில் கட்டிடங்கள் சமூக விரோதிகளின் கூடாரமாகி உள்ளது. செங்கல்பட்டு மாவட்டத்தில் 395 ஊராட்சிகளில் மகளிர் குழு கட்டிடங்கள் பல கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டன. அவற்றில் 90 சதவீத கட்டிடங்கள், பல ஆண்டுகளாக பாழாகியும் உள்ளன. இதனால் மகளிர் குழு கூட்டங்கள், கோயில், திண்ணை, வீடுகளின் மரத்தடியில் நடத்தப்படுகின்றன.

மகளிர் குழுவை சேர்ந்த செண்பகம் கூறியது: தற்போது செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சி பகுதிகளிலும் மகளிர் சுய உதவிக் குழு கட்டிடங்கள் மேற்கூரை, தரைத் தளம், பெயர்ந்து சேதமடைந்த நிலையில் பூட்டிக் கிடக்கின்றன. இதனால் மகளிர் சுய உதவி குழு கூட்டங்கள் நடத்த இட வசதி யின்றி தெருவில் சந்தித்து கூட்டம் நடத்தும் நிலை உள்ளது. கட்டிடங்களை பராமரிப்பதற்கு எங்களால் முடியவில்லை. மாறாக ஒன்றிய, மாவட்ட நிர்வாகம் தான் இதனை மேற்கொள்ள வேண்டும்.

அவர்கள் சரிவர செய்வதில்லை. சில இடங்களில் கட்சி பாகுபாடு பார்ப்பதால் கூட்டங்கள் அனுமதிப்பதில்லை. இதனால் வேறு இடங்களில் கூட்டத்தை நடத்த வேண்டிய நிலை உள்ளது. எனவே, மாவட்ட நிர்வாகம் இதில் கவனம் செலுத்தி தீர்வு காண வேண்டும். சேதமடைந்த மகளிர் சுய உதவிக்குழு கட்டிடங்களை அகற்றி புதிய கட்டிடங்களை மின் இணைப்புடன், தண்ணீர், கழிப்பறை வசதியோடு கட்டித்தர வேண்டும் என அரசுக்கு கோரிக்கை விடுக்கிறோம் என்றார்.

## தமிழகத்தில் கத்திரி வெயில் இன்று தொடக்கம்; 5 டிகிரி வெப்பநிலை உயரும்: வானிலை ஆய்வு மையம்

சென்னை:மே. 04-

தமிழகத்தில் கத்திரி வெயில் இன்று தொடங்குகிறது என்றும், தமிழகம், புதுச்சேரியில் நாளை அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை உயரக்கூடும் எனவும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகத்தில் கோடை காலம் தொடங்கியதில் இருந்து கடும் வெயில் வாட்டி வதைத்து வருகிறது. தினமும் பல நகரங்களில் 104 டிகிரி ஃபாரன்ஹீட் அளவுக்கு மேல் அதிகபட்ச வெப்பநிலை பதிவாகி வருகிறது.பகலில் கடும் வெயிலும், மாலை மற்றும் இரவில் கடும் புழுக்கமும் நிலவி வருகிறது. அதனால் பொதுமக்கள் பகல் நேரங்களில் வெளியில் செல்வதை தவிர்த்து வருகின்றனர். இந்நிலையில், தமிழகத்தில் நாளை அக்னி நட்சத்திரம் எனப்படும் கத்திரி வெயில் தொடங்கி வரும் மே 28ம் தேதி வரை 25 நாட்களுக்கு நீடிக்க உள்ளது.



தமிழகத்தில் நாளை முதல் மே 9ம் தேதி வரை தமிழகத்தில் மழைக்கான வாய்ப்பு குறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தெற்கு சத்தீஸ்கர் முதல் குமரிக்கடல் வரை தெலங்கானா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் தமிழகம் வழியாக, சுமார் 1.5 கிமீ உயரத்தில் ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக தமிழகத்தில் நாளை (மே 4) முதல் மே 9ம் தேதி வரை ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

இன்று, நீலகிரி, கோவை, திருப்பூர், தேனி, திண்டுக்கல், ஈரோடு, சேலம், நாமக்கல், திருச்சி, அரியலூர், பெரம்பலூர், திருவண்ணாமலை, கரூர் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களிலும், 5ம் தேதி, நீலகிரி, கோவை, திருப்பூர், தேனி, திண்டுக்கல், ஈரோடு, கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களிலும் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 30 முதல் 40 கிமீ வேகத்தில்) கூடிய கன மழை பெய்யக்கூடும்.

6ம் தேதி நீலகிரி, கோவை மாவட்டத்தின் மலை பகுதிகள், தேனி, தென்காசி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களிலும், 7ம் தேதி நீலகிரி, கோவை, தேனி, திண்டுக்கல், மதுரை, தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு மாவட்டங்களிலும், 8ம் தேதி நீலகிரி, கோவை, திருப்பூர், ஈரோடு, தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், தென்காசி, கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, ராமநாதபுரம், சிவகங்கை மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களிலும், 9ம் தேதி நீலகிரி, கோவை, திருப்பூர், ஈரோடு, தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், தென்காசி, கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, ராமநாதபுரம், சிவகங்கை மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களிலும் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 30 முதல் 40 கிமீ வேகத்தில்) கனமழை பெய்யக்கூடும்.தமிழகம், புதுச்சேரியில் நாளை அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை உயரக்கூடும். 5 முதல் 7ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை வழக்கமான அளவிலேயே இருக்கும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 102 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 84 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக மதுரை மாவட்டம் வாடிப்பட்டியில் 10 செமீ, சிவகங்கை மாவட்டம் திருப்புவனத்தில் 8 செமீ, மதுரை மாவட்டம் சோழவந்தான், சாத்தயார், தானியமங்கலத்தில் தலா 6 செமீ மழை பதிவாகியுள்ளது. இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## 70 ஆண்டுகளை நிறைவு செய்த அமலாக்கத் துறை: 94% குற்றங்கள் நிரூபணம், ரூ.2.36 லட்சம் கோடி சொத்து முடக்கம்

டெல்லி, மே.4-

மத்திய அரசின் கீழ் செயல்படும் அமலாக்கத் துறையின் 70 வது நிறுவன தின விழா டெல்லியில் நடைபெற்றது. இதில் மத்திய நிதித் துறை இணை அமைச்சர் பங்கஜ் சவுத்ரி, வருவாய்த் துறைச் செயலர் அரவிந்த் ஸ்ரீவஸ்தவா, கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் எஸ்.வி.ராஜூ, அமலாக்கத் துறை மூத்த அதிகாரிகள் பங்கேற்றனர்.

நிகழ்ச்சியில் அமலாக்கத் துறை இயக்குனர் ராகுல் நவீன் அறிக்கை சமர்ப்பித்தார். அதில் அவர் கூறியிருப்பதாவது: இந்த நிகழ்ச்சி கொண்டாட்டத்துக்கு மட்டுமல்லாமல், சுய பரிசோதனை செய்யவும் எதிர்காலத்துக்கான பாதையை வகுக்கவும் முக்கியமானது. வங்கி மோசடிகள், நிறுவன முறைகேடுகள், ரியல் எஸ்டேட் மோசடிகள் போன்றவற்றின் மீதே அமலாக்கத் துறையின் கவனம் உள்ளது.




தற்போது, கிரிப்டோ மோசடி, சைபர் குற்றம், தீவிரவாதத்துக்கு நிதியளித்தல் மற்றும் போதைப் பொருள் கடத்தல் போன்ற புதிய சவால்கள் உருவெடுத்துள்ளன. இந்த குற்றங்களை எதிர்கொள்ள அமலாக்கத் துறை தனது அணுகுமுறையை மாற்றி அமைத்துள்ளது. குறிப்பாக போதைப் பொருள் கடத்தல் வலைப் பின்னல்களைப் பொருளாதார ரீதியாக முடக்குவதில் அதிக கவனம் செலுத்தி வருகிறது.

உதாரணமாக, செங்கோட்டை குண்டுவெடிப்பு வழக்கில், தீவிரவாதம் மற்றும் உளவு நடவடிக்கைகளுடன் அதன் தொடர்புடைய பண மோசடி வழக்குகளில் அமலாக்கத் துறை விரைவான மற்றும் கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. 2025-26 நிதியாண்டில் அமலாக்கத் துறை 155 கூடுதல் புகார்கள் உட்பட மொத்தம் 812 குற்றப் பத்திரிகைகளைத் தாக்கல் செய்துள்ளது. இது அதற்கு முந்தைய ஆண்டைவிட 2 மடங்கு அதிகம்.

அமலாக்கத் துறை பதிவு செய்த வழக்குகளில், இதுவரை 94 சதவீதக் குற்றங்கள் நிரூபணமாகி உள்ளன. தற்போது சுமார் 2,400 வழக்குகள் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளன. இவற்றின் மீதான தீர்ப்புகள் விரைவில் வெளியாகும். இதுவரை மொத்தம் ரூ.2,36,017 கோடி மதிப்பிலான சட்டவிரோதச் சொத்துக்கள் முடக்கப்பட்டுள்ளன. கடந்த நிதியாண்டில் மட்டும் ரூ.81,422 கோடி மதிப்பிலான சொத்துக்கள் கைப்பற்றப்பட்டன. இது முந்தைய ஆண்டைவிட 170 சதவீதம் அதிகம்.

மேலும், வங்கிகள், முதலீட்டாளர்கள் மற்றும் வீடு வாங்குவோர் போன்ற பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு ரூ.63,142 கோடி திரும்ப ஒப்படைத்துள்ளது. பிரசிஎல் லிமிடெட் மோசடி வழக்கில், முதலீட்டாளர்களுக்கு ரூ.15,581 கோடி திரும்ப வழங்கப்பட்டுள்ளது. உதய்பூரைச் சேர்ந்த மற்றொரு ரியல் எஸ்டேட் வழக்கில், இருநூற்றுக்கும் அதிகமான வீடுகளை வாங்குவோருக்கு அவர்களின் சொத்துக்கள் திரும்ப ஒப்படைக்கப்பட்டன.

இதுவரை, எப்இஒஏ (தப்பி ஓடிய பொருளாதாரக் குற்றவாளிகள் சட்டம்) கீழ் 54 நபர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன. அவர்களில் 21 பேர் ‘தப்பி ஓடிய குற்றவாளிகள்’ என்று அறிவிக்கப்பட்டு, ரூ.2,178 கோடி மதிப்பிலான சொத்துகள் கைப்பற்றப்பட்டுள்ளன. இவ்வாறு அவர் பேசினார்.

**present sale for all over Tamil Nadu**

**தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது**



■ நீலகிரி மாவட்டம்குன்னூர் ஒட்டுப் பட்டரை அருள்மிகுஸ்ரீ காமாட்சி அம்மன் கோவில் திருவிழாவில் சிறப்பு விருந்தினராக மாநில விளையாட்டு மேம்பாட்டு அணியின் துணை செயலாளரும் குன்னூர் நகர மன்ற துணைத் தலைவர் வாசிம்ராஜா கலந்து கொண்டார் நகர்மன்ற உறுப்பினர்கள் ஜாகீர்உசேன், மன்சூர், ராபர்ட், நகர இளைஞரணி துணை அமைப்பாளர் கிருஷ்ணகுமார், மற்றும் நகர கிளை கழக நிர்வாகிகள் ஊர் பொதுமக்கள் , ஆகியோர் உடன் இருந்தனர்



## நீலகண்டராயன் பேட்டையில் துரியோதனன் படுகளம் நிகழ்ச்சி!

ராணிப்பேட்டை மே _04-

ராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கர் வட்டம் நீலகண்டராயன் பேட்டை அருள்மிகு திரௌபதி அம்மன் ஆலய தீமிதி திருவிழா மற்றும் அருள்மிகு ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலய கூழ்வார்த்தல் விழா வெகு விமர்சையாக நடைபெற்றது. கடந்த ஏப்ரல் 17ஆம் தேதி கொடியேற்றத்துடன் துவங்கிய நிகழ்ச்சியில் மகாபாரதம் ,பக்காசூரன் கும்பம் வருதல், திரௌபதி அம்மன் திருக்கல்யாணம், சுபத்திரை திருக்கல்யாணம், அர்ஜுனன் தபசு ஏறுதல், மாடு பிடி சண்டை, அரவான் களபலி, துரியோதனன் படுகளம், தீமிதி திருவிழா, தருமர் பட்டாபிஷேகம் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றது. முன்னதாக பால் தயிர் சந்தனம் விபூதி இளநீர் உள்ளிட்ட வாசனை திரவியங்கள் கொண்டு ஸ்ரீ திரௌபதி அம்மனுக்கு சிறப்பு அபிஷேகமும் அதனை தொடர்ந்து வண்ண மலர்கள் அலங்கரிக்கப்பட்டு மகாதீப ஆராதனையும் நடைபெற்றது இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு ஸ்வாமி தரிசனம் செய்து வழிபட்டனர்.. இறுதியில் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.



■ சென்னை முகப்பேர் கிழக்கு, மறைமலை அடிகளார் சாலையில் அமைந்துள்ள, அருள்மிகு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் விமான கோபுரம் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கும் ஆலய மஹா கும்பாபிஷேக விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து சாமி அலங்காரம் மகா தீபாராதனை, தீர்த்த பிரசாதம் , வருகை தந்த அனைத்து பக்தர்களுக்கும் சித்ரா பௌர்ணமியை முன்னிட்டு அன்னதானம் வழங்கப்பட்டது. ஆலய தலைவர் ஆர். வாசு,செயலாளர் ஏ.பி.டி மூர்த்தி , பொருளாளர் சி. சின்னதம்பி, துணை பொருளாளர் சுப்பிரமணி மற்றும் ஆலய நிர்வாகிகள் , விழா குழுவினர் , ஊர் பொதுமக்கள் இணைந்து கும்பாபிஷேகத்தை சிறப்பாக நடத்தினர்.



■ சென்னை, புழல் மெயின் ரோடு அண்ணா நினைவு நகரில் அமைந்துள்ள ஸ்ரீதேவி கருமாரியம்மன் திருக்கோயில் புனராவர்த்தன ஜீர்னோத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக பெருவிழா நடைபெற்றது. வருகை தந்த பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. ஆலய தலைவர் எம் கே டி. ராஜன், செயலாளர் ரவி என்கின்ற கணேசன், பொருளாளர் சேகர் மற்றும் ஆலய நிர்வாகிகள் ஊர் பொதுமக்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

## தேனி மாவட்டம் தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 வாக்கு எண்ணும் பணிகளில் ஈடுபட உள்ள அலுவலர்களுக்கு கணினி மூலம் சுழற்சி முறையில் பணிகள் ஒதுக்கீடு செய்வதற்கான இரண்டாம் கட்ட சீரற்றமயமாக்கல் பணி



தேனி மே. 04-

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 ஐ முன்னிட்டு 4 சட்டமன்றத் தொகுதிகளில் பதிவான வாக்குகளை எண்ணும் பணிகளில் ஈடுபடும் தேர்தல் மேற்பார்வையாளர்கள், உதவியாளர்கள் மற்றும் நுண்பார்வையாளர்கள் ஆகியோருக்கு கணினி மூலம் சுழற்சி முறையில் பணிகள் ஒதுக்கீடு செய்வதற்கான இரண்டாம்கட்ட சீரற்றமயமாக்கல் (Second Level Randomization) மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் .ரஞ்ஜீத்சிங், தலைமையில், பொதுப்பார்வையாளர்கள் திரு.பீம் சிங், .வினய் பிரதாப் சிங்.ஜெகன்நாத் மகாதேவ் விர்கர் மற்றும் கஹ்னு சரண் திர் அவர்கள் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு 23.04.2026 அன்று ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெற்றது. தேனி மாவட்டத்தில் உள்ள 198.ஆண்டிபட்டி, 199.பெரியகுளம், 200.போடிநாயக்கனூர், 201.கம்பம் ஆகிய 4 சட்டமன்றத் தொகுதிகளுக்கான வாக்கு எண்ணும் மையம் கொடுவிலார்பட்டியில் உள்ள தேனி கம்மவார் சங்கம் பொறியியல் கல்லூரியில் அமைக்கப்பட்டு, நாளை (04.05.2026 ) வாக்கு எண்ணிக்கை நடைபெற உள்ளது. வாக்கு எண்ணிக்கையில் ஒவ்வொரு மேஜையிலும் ஒரு மேற்பார்வையாளர், ஒரு உதவியாளர் மற்றும்ஒரு நுண்பார்வையாளர் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். அதேபோன்று, தபால் வாக்கு சீட்டு எண்ணிக்கை காலை 8 மணிக்கும், அதன்பின் மின்னணு வாக்கு இயந்திரத்தின் வாக்கு எண்ணிக்கை துவங்கப்படும்.மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் பதிவாகியுள்ள வாக்குகளை எண்ணும் பணிக்கு 68 மேற்பார்வையாளர்கள், 68 உதவியாளர்கள் மற்றும் 68 நுண்பார்வையாளர்கள் என 204 நபர்களும், தபால் வாக்குகளை எண்ணும் பணிக்கு 24 மேற்பார்வையாளர்கள், 48 உதவியாளர்கள் மற்றும் 24 நுண்பார்வையாளர்கள் என 96 நபர்களும் என மொத்தம் 300 நபர்கள் வாக்கும் எண்ணும் பணியில் ஈடுபட உள்ளார்கள். மேற்பார்ப்பி அலுவலர்களுக்கு கணினி மூலம் சுழற்சி முறையில் பணிகள் ஒதுக்கீடு செய்வதற்கான இரண்டாம்கட்ட சீரற்றமயமாக்கல் (Second Level Randomization) மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் தேர்தல் பொதுப் பார்வையாளர்கள் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார், தேர்தல் நடத்தும் அலுவலர் / பெரியகுளம் சார் ஆட்சியர் திரு.ரஜத் பீடன் தேர்தல் நடத்தும் அலுவலர் / தனித்துணை ஆட்சியர் கவிதா, தேர்தல் நடத்தும் அலுவலர் / மாவட்ட வழங்கல் அலுவலர். நல்லையா, தேர்தல் நடத்தும் அலுவலர் / உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர்.சையத் முகைதீன் இப்ராஹிம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் திரு.ராமகிருஷ்ணன் (பொது).காசி (தேர்தல்), செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் .ஏ.எடிசன், வட்டாட்சியர் (தேர்தல்) .சுருளி, வட்டாட்சியர் / உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் உட்பட அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

## கிருஷ்ணகிரி அருகே நெக்குந்தி மலையில்இரவு நேரங்களில் மணல் திருட்டு -கலெக்டரிடம் புகார்

கிருஷ்ணகிரி,மே.04-

கிருஷ்ணகிரி அருகே நெக்குந்தி மலையில் இரவு நேரங்களில் மணல் திருட்டை தடுக்க வலியுறுத்தி, பசுமை தாயகம் சார்பில் கலெக்டரிடம் புகார் மனு அளித்தனர்.இதுதொடர்பாக கிருஷ்ணகிரி மாவட்ட பசுமை தாயகத்தின் செயலாளர் சந்திரசேகர் மற்றும் நிர்வாகிகள் அளித்த மனுவில் கூறியிருப்பதாவது: கிருஷ்ணகிரி அருகே பெரியமுத்தூர் ஊராட்சிக்கு உட்பட்ட கிராமம் நெக்குந்தி. இக்கிராமத்தில் சிறு, சிறு மலைகள் உள்ளன. இந்த மலைகளில் மரங்களும் அதிகளவில் உள்ளன. இந்நிலையில், சிலர் இரவு நேரங்களில் மலைகளில் உள்ள மரங்களை வெட்டியும், மண்ணை திருடிச் செல்கின்றனர். இதனால் இயற்கை வளங்கள் அழிவை நோக்கி செல்கிறது. எனவே, நெக்குந்தி மலையில் ஆய்வு செய்து, மண் கொள்ளையில் ஈடுபட்டவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதுடன், அபராதம் விதிக்க வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## கிணற்றில் இறங்கி தூர் வாரிய பஞ்சாயத்து பெண் உறுப்பினர்

இடுக்கி:மே.04-

கேரள மாநிலம் இடுக்கி மாவட்டம் உப்புத்தரா கிராம பஞ்சாயத்து உறுப்பினர் மரீனா சனீஷ். உப்புத்தரா கிராம மக்கள் கோடை காலங்களில் குடிநீருக்காக பல மைல் தூரம் செல்ல வேண்டிய நிலையிருந்தது. இதே கிராமத்தில் பிரிட்டிஷார் ஆட்சிக் காலத்தில் தோண்டப்பட்ட கிணறு ஒன்று இருக்கிறது. இது நல்ல தண்ணீர் கிணறும் கூட. ஆனால் போதிய பராமரிப்பில்லாமல் வறண்டு இருந்தது.

இதையடுத்து இந்தக் கிணற்றை தூர் வார மரீனா முடிவு செய்தார். இதையடுத்து கிராம மக்கள் உதவியுடன் அவர் மட்டுமே தன்னந்தனியாக கிணற்றில் இறங்கி தூர் வாரினார். தற்போது இந்தக் கிணற்றில் குடிநீர் ஊற்று அதிகரித்து தண்ணீர் வரத்தொடங்கியுள்ளது.

இதுகுறித்து மரினா சனீஷ் கூறும்போது, "இந்த 15 அடி ஆழமுள்ள கிணற்றில் வண்டல் மண்ணும், சேறும் நிறைந்திருந்தது. இதையடுத்து கோடை காலத்துக்கு முன்னதாக தூர் வார முடிவு செய்தோம். இதற்கு முன்பு இதை 100க்கும் மேற்பட்ட குடும்பங்கள் இந்தக் கிணற்றை பயன்படுத்தி வந்தனர்.

முதலில் யாரும் கிணற்றில் இறங்க முன்வரவில்லை. இதையடுத்து நானே இறங்கி சுத்தம் செய்தேன். அதில் இருந்த சேறு, வண்டல் மண் ஆகியவற்றை தூர் வாரி சுத்தப்படுத்தினேன். இயந்திரங்கள் உதவியுடன் சுமார் 4 மணி நேரத்தில் கிணறு சுத்தம் செய்யப்பட்டது. தற்போது கிணற்றில் நல்ல தண்ணீர் ஊற்றெடுக்கத் தொடங்கியுள்ளது. இதையடுத்து மக்கள் பயன்படுத்தும் அளவுக்கு கிணற்றில் தண்ணீர் மட்டம் அதிகரித்துள்ளது. இதனால் இந்தப் பகுதி மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்" என்றார்.

இதுதொடர்பான வீடியோக்கள் சமூக வலைதளங்களில் வெளியாகி வைரலாகியுள்ளது.

## "வணிகமயமாக்கப்பட்ட எக்ஸிட் போல்களில் எனக்கு நம்பிக்கையில்லை" மாணிக்கம் தாகூர்



மதுரைமே.04-

"தற்போதைய சூழலில் வாக்குப்பதிவுக்குப் பிந்தைய கருத்துக் கணிப்புகள் வணிகமயமாக்கப்பட்டுவிட்டன. அவற்றின் மீது எனக்கு நம்பிக்கையில்லை" என்று காங்கிரஸ் எம்.பி மாணிக்கம் தாகூர் விமர்சித்துள்ளார்.அசாம் மற்றும் மேற்கு வங்க மாநில சட்டப்பேரவைத் தேர்தல்களில் பாஜக வெற்றிபெறும் என்று கணித்துள்ள சமீபத்திய வாக்குப்பதிவுக்குப் பிந்தைய கருத்துக் கணிப்புகளை காங்கிரஸ் எம்.பி. மாணிக்கம் தாகூர் நிராகரித்தார். மதுரையில் இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், "வாக்குப்பதிவுக்குப் பிந்தைய கருத்துக்கணிப்புகள் இப்போது வணிகமயமாக்கப்பட்டுவிட்டன. எனவே, இந்தக் கருத்துக் கணிப்புகளின் மீது நான் நம்பிக்கை வைப்பதில்லை. நாம் மக்களின் தீர்ப்புக்காகக் காத்திருக்க வேண்டும்; மக்கள் தங்கள் தீர்ப்பை ஏற்கனவே வழங்கிவிட்டனர். முடிவுகள் வெளியாகவுள்ள நிலையில், நாம் பொறுமையுடன் காத்திருந்து முடிவுகளை அறிந்து கொள்வதற்கான நேரமிது.தமிழ்நாட்டில் வாக்களிப்பு விகிதம் அதிகரித்துள்ளது. இளைஞர்கள், குறிப்பாக இளம் ஆண்களும் பெண்களும் தேர்தல் செயல்முறையில் அதிகளவில் ஈடுபட்டிருக்கும் விதம், நாட்டின் ஜனநாயகத்தின் மீது இது ஒரு குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையை எனக்கு அளிக்கிறது. இந்தக் காரணிகள் அனைத்தும் தமிழ்நாட்டின் தொடர் வளர்ச்சிக்குப் பெரிதும் பங்களிக்கும் என்று நான் நம்புகிறேன்" என்று மாணிக்கம் தாகூர் கூறினார்.234 உறுப்பினர்களைக் கொண்ட தமிழக சட்டப்பேரவையில், திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி தனிப்பெரும்பான்மையைப் பெறும் என்று பெரும்பாலான எக்ஸிட் போல் கருத்துக் கணிப்புகள் கணித்துள்ளன. ஏப்ரல் 23ஆம் தேதி நடந்த தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் 82.24 சதவீத வாக்குகள் பதிவானது. வாக்கு எண்ணிக்கை நாளை மே 4ஆம் தேதி நடைபெற உள்ளது.

## கிருஷ்ணகிரியில்வாக்குகள் எண்ணும் பணியில் ஈடுபடும் அலுவலர்களுக்கு சமவாய்ப்புக்கு உட்படுத்துதல்தேர்தல் பார்வையாளர்கள் முன்னிலையில் நடந்தது



கிருஷ்ணகிரி, மே. 04.

கிருஷ்ண்கிரியில் வாக்குகள் எண்ணும் பணியில் ஈடுபடும் அலுவலர்களுக்கு சமவாய்ப்புக்கு உட்படுத்துதல், தேர்தல் பார்வையாளர்கள் முன்னிலையில் நடந்தது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தின் ஆறு சட்டமன்ற தொகுதிகளில் பதிவான வாக்குகள் எண்ணும் பணியில் ஈடுபடும் அலுவலர்களுக்கான சமவாய்ப்புக்கு உட்படுத்துதல், மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில், தேர்தல் பார்வையாளர்கள் முன்னிலையில் நடைபெற்றது. இது குறித்து மாவட்ட தேர்தல் அலுவலரும், கலெக்டருமான தினேஷ்குமார் கூறுகையில், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள ஆறு சட்டமன்ற தொகுதிகளில் பதிவான வாக்குகள் இன்று 4ம் தேதி கிருஷ்ணகிரி அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் எண்ணப்படவுள்ளது. இதையடுத்து வாக்குகள் எண்ணும் அலுவலர்களுக்கான சமவாய்ப்புக்கு உட்படுத்துதல் ஊத்தங்கரை (தனி) தேர்தல் பார்வையாளர் விபின் குமார் ராய், பர்கூர் அனில்குமார் சிங், கிருஷ்ணகிரி சௌரவ்பாபு சிங்ஹால், வேப்பனபள்ளி ஜெயந்திரகுமார் விஜய்வாட், ஓசூர் பண்வே ராகுல் துக்காராம், தளி முகேஷ்குமார் மீனா மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலரும், கலெக்டருமான தினேஷ்குமார் முன்னிலையில் நடந்தது என்றார். இந்த கூட்டத்தில், மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு தங்கதுரை, மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக்குறள், தேர்தல் நடத்தும் அலுவலர்கள் ஆக்ரிதி சேத்தி, அபிநயா, கீதாராணி, சிவக்குமார், பழனி, மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) ஹெலன்ராணி, தேர்தல் தனி தாசில்தார் சம்பத் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# வாக்குகள் எண்ணப்படும்அனைத்து மேசைகளிலும் கண்காணிப்பு கேமரா பொருத்தம்

## கிருஷ்ணகிரி கலெக்டர் தகவல்

கிருஷ்ணகிரி,மே.4-

வாக்குகள் எண்ணப்படும் அனைத்து மேசைகளிலும் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டு கண்காணிக்கப்படுகிறது என கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் ச.தினேஷ் குமார் தெரிவித்தார்.கண்காணிப்பு கேமராகிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில், வாக்கு எண்ணிக்கையில் ஈடுபடவுள்ள வாக்கு எண்ணிக்கை மேற்பார்வை யாளர்கள், நுண்பார்வையாளர்கள் மற்றும் உதவியாளர்களுக்கான பயிற்சி மாவட்ட தேர்தல் அலுவலரும், கலெக்டருமான ச.தினேஷ் குமார் தலைமையில் நடந்தது. இப்ப யிற்சியில் கலெக்டர் பேசியதாவது: மாவட்டத்தில் உள்ள 6 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு இன்று (4ம் தேதி) காலை 8 மணி முதல் தொடங்கும். தபால் மற்றும் மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகள் எண்ணும் பணிக்காக, 135 மேற்பார்வையாளர்கள், 162 உதவியாளர்கள் மற்றும் 138 நுண்பார்வையாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், வாக்கு எண்ணிக்கை நடைபெறும் அனைத்து மேசைகளிலும் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டு கண்காணிக்கப்படுகிறது.

இணையதளம் ஈக்கு எண்ணிக்கை சுற்றுகள் வாரியாக எண்ணப்பட்டு முடிவுகள் எண்கோர் (Encore) இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும். மேலும், வாக்கு எண்ணிக்கை மையத்தில் வைக்கப்பட்டுள்ள அறிவிப்பு பலகையில் சுற்றுகள் வாரியாக வெளியிடப்படும். வாக்கு எண்ணும் மேற்பார்வையாளர்கள், நுண்பார்வையாளர்கள், உதவியாளர்கள் மற்றும் வாக்கு எண்ணும் பணியில் ஈடுபடும் அனைத்து அரசு அலுவலர்களும் தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டு நெறிமுறைகளை தவறாது கடைபிடிக்க வேண்டும், என்றார். இப்பயிற்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக்குறள், கலெக்டரின் நேர்முக உதவியாளர்கள் (பொது) கிருஷ்ணன், (தேர்தல்) ஹலன் ராணி, தேர்தல் நடத்தும் அலுவலர்கள் சிவக்குமார், அபிநயா, ஷாஜகான், கீதாராணி, பழனி, தேர்தல் தனி வட்டாட்சியர் சம்பத், மேற்பார்வையாளர்கள், நுண்பார்வையாளர்கள் மற்றும் உதவியாளர்கள் கலந்து கொண்டனர்.

# தேனி மாவட்டம்தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 வாக்கு எண்ணிக்கை நடைபெற உள்ளதை முன்னிட்டு, தயார் நிலையில் உள்ள வாக்கு எண்ணும் மையத்தினை மாவட்ட தேர்தல் அலுவலர் ஆய்வு



தேனி மே. 04-

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, கொடுவிலார்பட்டி தேனி கம்மவார் சங்கம் பொறியியல் கல்லூரியில் 4 சட்டமன்றத் தொகுதிகளில் பதிவான வாக்குகளை எண்ணும் பணிகளுக்காக, தயார் நிலையில்

உள்ள வாக்கு எண்ணும் மையத்தினை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர்.ரஞ்ஜீத் சிங். தலைமையில் பொதுப்பார்வையாளர்கள் .பீம் சிங்.வினய் பிரதாப் சிங்,.ஜெகன்நாத் மகாதேவ் விர்கர் அவர்கள் மற்றும் . கஹ்னு சரண் திர் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு 23.04.2026 அன்று ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெற்றுள்ளது. தேனி மாவட்டத்தில் உள்ள 198.ஆண்டிபட்டி, 199.பெரியகுளம், 200.போடிநாயக்கனூர், 201.கம்பம் ஆகிய 4 சட்டமன்றத் தொகுதிகளுக்கான வாக்கு எண்ணும் மையமாக கொடுவிலார்பட்டியில் உள்ள தேனி கம்மவார் சங்கம் பொறியியல் கல்லூரியில் அமைக்கப்பட்டு, நாளை (04.05.2026) வாக்கு எண்ணிக்கை நடைபெற உள்ளது. வாக்கு எண்ணிக்கை பணிக்கான அனைத்து முன்னேற்பாடுகளும் அம்மையத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதனடிப்படையில், இன்றைய தினம் கொடுவிலார்பட்டி தேனி கம்மவார் சங்கம் பொறியியல் கல்லூரியில் தபால்வாக்கு எண்ணும் அறைகள், மின்னணு வாக்கு எண்ணுவதற்கான அறைகள், கட்டுப்பாட்டு அறைகள் மற்றும் தேர்தல் பணியாளர்கள், வேட்பாளர்களின் முகவர்கள் செல்லுவதற்கான வழித்தடங்கள் எனஇந்திய தேர்தல் ஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளதா எனவும், மேலும், மூன்றடுக்கு காவல் பாதுகாப்புடன் வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள வளாகம் முழுவதும் கண்காணிப்பு கேமராக்கள் மூலம் கண்காணிக்கப்பட்டு வருவதையும், எல்இடி திரை மூலம் கட்டுப்பாட்டு அறையின் செயல்பாட்டை வேட்பாளர்களின் முகவர்கள் பார்வையிடுவதையும், காவல் கட்டுப்பாட்டு அறையின் செயல்பாடுகள் மற்றும் வாக்கு எண்ணும் மையத்தில் அடிப்படை வசதிகள் முறையாக அமைக்கப்பட்டு வாக்கு எண்ணுவதற்கான பணிகள் தயார் நிலையில் உள்ளதை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில், தேர்தல் பொதுப்பார்வையாளர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். இவ்வாய்வில், மாவட்ட கூடுதல் தேர்தல் அலுவலர் / மாவட்ட காவல் கண்கா ணிப்பாளர்.சினேஹாப்ரியாமாவட்ட வருவாய் அலுவலர்.ப.ராஜகுமார், தேர்தல் நடத்தும் அலுவலர் /பெரியகுளம் சார் ஆட்சியர்.ரஜத் பீடன், தேர்தல் நடத்தும் அலுவலர் /தனித்துணை ஆட்சியர். கவிதா, தேர்தல் நடத்தும் அலுவலர் / மாவட்ட வழங்கல் அலுவலர் நல்லையா, தேர்தல் நடத்தும் அலுவலர் / உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் .சையத் முகைதீன் இப்ராஹிம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்). காசி, உதவி இயக்குநர் (நில அளவை).அப்பாஸ், செயற்பொறியாளர் .பிரபு, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஏ.எடிசன், உதவி செயற்பொறியாளர்கள் . சண்முகவேல், . சரவணக்குமார், வட்டாட்சியர்கள் சுருளி(தேர்தல்), சதீஸ்குமார் (தேனி), உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் / வட்டாட்சியர்கள் உட்பட அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

# 13 பேர் உயிரிழந்த ஜபல்பூர் படகு விபத்தில் மீட்புப் பணி நிறைவு



போபால்:மே. 04-

மத்திய பிரதேச மாநில ஜபல்பூர் மாவட்டத்தில் பர்கி அணையில் கடந்த வியாழக்கிழமை அன்று சுற்றுலா படகு கவிழ்ந்த விபத்தில் 13 பேர் உயிரிழந்துள்ளனர். இன்று (மே 3) காலை தமிழகத்தை சேர்ந்த காமராஜ் (39), மயூரன் (5) ஆகியோரது உடல்கள் மீட்கப்பட்டது. விபத்தில்சிக்கிய படகில் சுமார் 41 பேர் பயணித்ததாக அம்மாநில போலீஸார் தகவல் தெரிவித்துள்ளனர். இதில் 28 பேர் மீட்கப்பட்டனர். 13 பேர் உயிரிழந்தனர். சிசிடிவி காட்சிகளின் அடிப்படையில் போலீஸார் இந்த தகவலை அளித்துள்ளனர்.விபத்தில் சிக்கிய சுற்றுலா படகு, மத்திய பிரதேச அரசின் சுற்றுலா துறையால் இயக்கப்பட்டு வந்தது. இந்த படகு சுமார் 20 ஆண்டு காலம் பயன்படுத்தப்பட்டு வந்தது விசாரணையில் தெரியவந்துள்ளது. கடந்த 2006ல் இந்த கப்பல் கட்டப்பட்டது. விபத்தை அடுத்து அதற்கு காரணமான மூவர் மீது அம்மாநில அரசு நடவடிக்கை எடுத்தது. படகை இயக்கியவர்களின் அலட்சியம்தான் இந்த விபத்துக்கு காரணம் எனத் தெரியவந்துள்ளது. இந்த சம்பவத்தை நேரில் பார்த்தவர்களும் உறுதி செய்துள்ளனர். இது தொடர்பாக வெளியான வீடியோவில் படகுப் பயணங்களின்போது செய்ய வேண்டிய அடிப்படை பாதுகாப்பு விதிகளைக் கூட விபத்தில் சிக்கிய படகை இயக்கிய ஊழியர்கள் பின்பற்றவில்லை என்று தெரியவந்துள்ளது.மீட்புப் பணி நிறைவு: இந்தச் சூழலில் இன்று (மே 3) படகு விபத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணி நிறைவடைந்ததாக ஜபல்பூர் மாவட்ட ஆட்சியர் ராகவேந்திரா சிங் எக்ஸ் தளத்தில் ட்வீட் செய்துள்ளார். மீட்புப் பணியில் அயராது உழைப்பை செலுத்திய பல்வேறு துறையினருக்கு அவர் நன்றி தெரிவித்துள்ளார். இந்த விபத்து குறித்து விரிவான விசாரணைக்கு மத்தியப் பிரதேச அரசு உத்தரவிட்டுள்ளது.

# 5 மாநிலங்களில் ஆயிரம் கார்கள் திருட்டு 10 பேர் கைது

## 31 வாகனங்கள் பறிமுதல்



5புதுடெல்லி: மே. 04-

டெல்லி, உத்தர பிரதேசம் உள்ளிட்ட 5 மாநிலங்களில் ஒரு கும்பல் சுமார் 1,000க்கும் மேற்பட்ட கார்களை திருடி விற்பனை செய்துள்ளது. இதுதொடர்பாக 10 பேர் கைது செய்யப்பட்டு உள்ளனர். அவர்களிடம் இருந்து 31 கார்கள் பறிமுதல் செய்யப்பட்டு உள்ளன.இதுகுறித்து டெல்லி போலீஸார் நேற்று கூறியதாவது: டெல்லி மற்றும் தேசிய தலைநகர் பிராந்தியம் (என்சிஆர்) பகுதிகளில் கார்கள் அதிகளவில் திருடு போயின. குறிப்பாக டெல்லி ரோகிணி, உத்தம் நகர் பகுதிகளில் கார் திருட்டு அதிகரித்தது. சிசிடிவி கேமராக்களை தீவிரமாக ஆய்வு செய்து, நீண்ட தேடலுக்குப் பிறகு கார் திருட்டில் ஈடுபட்டு வந்த 10 பேர் கும்பலை பிடித்து உள்ளோம்.

இந்த கும்பலின் தலைவனாக தாமன் தீப் சிங் என்பவர் செயல்பட்டு உள்ளார். இவர் பஞ்சாபில் பழைய கார்களை விற்கும் நிறுவனத்தை நடத்தி வருகிறார். சாப்ட்வேர் இன்ஜினீயர், இமாச்சல பிரதேசத்தை சேர்ந்த அரசு ஊழியர் ஆகியோரும் கும்பலில் உள்ளனர்.

டெல்லி, ஹரியாணா, பஞ்சாப், உத்தர பிரதேசம், இமாச்சல பிரதேசம் ஆகிய மாநிலங்களில் சுமார் 1,000க்கும் மேற்பட்ட கார்களை இந்த கும்பல் திருடி விற்பனை செய்திருப்பது முதல்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. தற்போது அவர்களிடம் இருந்து 31 விலை உயர்ந்த கார்களை பறிமுதல் செய்திருக்கிறோம். இதில் 11 பார்சூனர், 6 செல்டோஸ், 6 கிரெட்டா, 3 இன்னோவா, 2 ஸ்கார்பியோ, தலா ஒரு வென்யூ, தார், ஸ்விப்ட் கார்கள் அடங்கும்.திருடப்படும் கார்களின் சேசிஸ், இன்ஜின் எண்களை இந்த கும்பல் மாற்றியிருக்கிறது. போலி ஆவணங்கள் மூலம் கார்களுக்கு புதிய பதிவு எண்களை பெற்றுள்ளனர். பழைய கார்கள் விற்பனையகங்கள் மூலம் திருட்டு கார்களை நல்ல விலைக்கு விற்பனை செய்து பெரும் தொகையை திரட்டி உள்ளனர். அவரவர் பங்களிப்புக்கு ஏற்ப பணம் பகிர்ந்து அளிக்கப்பட்டு உள்ளது.இந்த கும்பலால் விற்பனை செய்யப்பட்ட 1,000 கார்களின் விவரங்களை சேகரித்து வருகிறோம். திருட்டு கும்பலோடு தொடர்புடையவர்கள் குறித்தும் தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. இவ்வாறு டெல்லி போலீஸார் தெரிவித்துள்ளனர்.



# மிசோரம் எல்லை கிராமத்துக்குள் அகதிகள் வருகை அதிகரிப்பு

ஐஸ்வால்மே. 04-

: மியான்மரில் சின் மாநிலம் இந்திய எல்லையை ஒட்டி அமைந்துள்ளது. இம்மாநிலம் இந்தியாவுடன் 500 கி.மீட்டருக்கும் அதிகமான சர்வதேச எல்லையைப் பகிர்ந்து கொள்கிறது. அங்கு மியான்மர் அரசுக்கு எதிராக செயல்படும் கிளர்ச்சிக் குழுக்களுக்கு எதிராக ராணுவம் அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகிறது.இந்நிலையில், சின் மாநிலத்தின் காப்புச்சிப் கிராமத்தில் மியான்மர் ராணுவம் கடந்த வியாழக்கிழமை குண்டுவீசி தாக்குதல் நடத்தியதாகவும் இதில் 6 குழந்தைகள் உட்பட 7 பேர் உயிழந்ததாகவும் கூறப்படுகிறது. இதையடுத்து 50க்கும் மேற்பட்ட அகதிகள் இந்தியாவின் மிசோரம் மாநிலத்தின் சோகாவ்தார் கிராமத்துக்கு வந்துள்ளதாக போலீஸார் தெரிவித்தனர்.இதுகுறித்து, சின் மாநிலத்தின் சிவிலியன் அரசான சின்லாந்து கவுன்சிலின் செய்தித் தொடர்பாளர் ஜேக்கப் வி.ஜாமா கூறும்போது, ‘‘காப்புச்சிப் பகுதியில், மியான்மர் ராணுவம் தனது விமானப் படையைப் பயன்படுத்தி, பொதுமக்கள் வசிக்கும் இடங்கள் மீது கண்மூடித்தனமாக குண்டுவீசியதாக எங்களுக்கு தகவல்கள் கிடைத்தன. அந்த கிராமத்திலோ அல்லது அதைச் சுற்றிலோ எந்தவொரு கிளர்ச்சிப் படையின் முகாமும் இல்லாத நிலையில், கிராம மக்களிடையே அச்சத்தை விதைக்கும் நோக்கில் ராணுவம் இந்த தாக்குதலை நடத்தியதாக நாங்கள் கருதுகிறோம். சின் மாநிலத்தை மீண்டும் தங்கள் வசமாக்கிக் கொள்ள மேற்கொள்ளும் முயற்சியே இதற்குகு காரணம்’’ என்றார்.





# உத்தர பிரதேசத்தில் அரசு உதவி பெறும் மதரஸாவில் பயோமெட்ரிக் வருகைப் பதிவில் முறைகேடு

லக்னோ: மே. 04-

உ.பி.யில் உள்ள மதரஸாக்களில் போலி வருகைப் பதிவு, போலி மாணவர் சேர்க்கை மற்றும் நிதியுதவி பெறுவதில் முறைகேடுகள் நடப்பதாக பல்வேறு குற்றச்சாட்டுகள் வெளிவந்துள்ளன. இந்நிலையில் உ.பி.யின் பாரபங்கியில் அரசு உதவி பெறும் மதரஸா ஒன்றில் புதிய முறைகேடு அம்பலமாகியுள்ளது.

இங்கு உண்மையான பயோமெட்ரிக் சரிபார்ப்புக்குப் பதிலாக, பிளாஸ்டிக் அட்டைகளைப் பயன்படுத்தி ஆசிரியர்களின் வருகை பதிவு செய்யப்பட்டுள்ளது. இதுதொடர்பாக வெளியான ஒரு வீடியோவில் பல ஆசிரியர்களின் பெயர்கள் பிளாஸ்டிக் அட்டைகளில் எழுதப்பட்டு, பெருவிரல் ரேகைக்குப் பதிலாக வருகைப் பதிவு செய்யப் பயன்படுத்தப்படுவதைக் காண முடிகிறது. பணிக்கு வராத ஆசிரியர்களுக்கும் ஊழியர்கள் வருகைப் பதிவு செய்வதை அந்த வீடியோ காட்டுகிறது.

இது, பின்னர் சம்பளம் வழங்கப் பயன்படுத்தப்படும் பதிவேடுகளில் முறைகேடு செய்யப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டுகிறது. இந்த சம்பவம், கண்காணிப்பு நடைமுறைகள் குறித்து கடும் கேள்விகளை எழுப்பியுள்ளது.

# மேற்கு வங்க ஃபால்டா தொகுதியில் மே 21ல் மறு தேர்தல் அறிவிப்பு



கொல்கத்தா: மே. 04-

மே 21 அன்று மேற்கு வங்கத்தின் ஃபால்டா தொகுதியில் உள்ள அனைத்து வாக்குச்சாவடிகளிலும் மறு தேர்தல் நடைபெறும் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.இதுகுறித்து தேர்தல் ஆணையம் வெளியிட்ட அதிகாரப்பூர்வ அறிக்கையில், ஃபால்டா சட்டப்பேரவைத் தொகுதியில் உள்ள அனைத்து வாக்குச்சாவடிகளிலும் மே 21 அன்று மறு தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இந்த தொகுதியில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் மிகப்பெரிய அளவிலான முறைகேடுகள் நடந்ததாக பாஜக குற்றஞ்சாட்டியதைத் தொடர்ந்து இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. இதன்படி, மே 21 அன்று காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை வாக்குப்பதிவு நடைபெறும் என்றும், வாக்கு எண்ணிக்கை மே 24 அன்று நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

“மேற்கு வங்கத்தின் ஃபால்டா சட்டப்பேரவைத் தொகுதியில், ஏப்ரல் 29 அன்று நடைபெற்ற வாக்குப்பதிவின் போது பெருமளவிலான வாக்குச்சாவடிகளில் நிகழ்ந்த கடுமையான தேர்தல் விதிமீறல்கள் மற்றும் ஜனநாயக செயல்முறையின் சீர்குலைவு ஆகியவற்றை கருத்தில் கொண்டு, ஃபால்டா தொகுதியில் உள்ள 285 வாக்குச்சாவடிகளிலும் புதிதாக வாக்குப்பதிவு நடத்தப்பட வேண்டும் என்று இந்தியத் தேர்தல் ஆணையம் உத்தரவிடுகிறது,’’ என்று தேர்தல் ஆணையம் தனது அதிகாரப்பூர்வ அறிக்கையில் தெரிவித்துள்ளது.

தெற்கு 24 பர்கானாஸ் மாவட்டத்தில் உள்ள இத்தொகுதியில், நேற்று உள்ளூர் மக்கள் பெரும் போராட்டங்களை நடத்திய சில மணி நேரங்களிலேயே இந்த அறிவிப்பு வெளியானது. வாக்கு எண்ணிக்கை முடிந்த பிறகு தங்களுக்குப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தி நூற்றுக்கணக்கான கிராம மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். மேலும் இப்பகுதியில் மறுவாக்குப்பதிவு நடத்தப்பட வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். பாஜக கொடிகளை ஏந்திய பெண்கள் உட்பட ஏராளமான போராட்டக்காரர்கள் ஹசிம்நகர் கிராமத்தில் சாலை மறியலில் ஈடுபட்டனர். இதைத் தொடர்ந்து, மத்திய ரிசர்வ் காவல் படையினர் பெருமளவில் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து, போதுமான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அப்பகுதி மக்களுக்கு உறுதியளித்தனர். முன்னதாக, தேர்தல் அதிகாரிகள் மற்றும் பார்வையாளர்கள் சமர்ப்பித்த அறிக்கைகளின் அடிப்படையில், டைமண்ட் ஹார்பர் மற்றும் மக்ரஹாட் பச்சிம் பகுதிகளில் உள்ள 15 வாக்குச்சாவடிகளில் நேற்று மறுவாக்குப்பதிவு நடத்தப்பட்டது.

# கல்யாண ஊர்வலத்தில் அதிக சத்தத்தால் 140 கோழிகள் உயிரிழப்பு: உ.பி. ஒலி பெருக்கி உரிமையாளர் கைது



சுல்தான்பூர்:மே. 04-
உத்தர பிரதேசத்தில் அதிக சத்தம் காரணமாக 140 கோழிகள் உயிரிழந்தன. இதுதொடர்பாக ஒலி பெருக்கி உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

உத்தர பிரதேசம் சுல்தான்பூரில் கடந்த 25ம் தேதி திருமண ஊர்வலம் நடைபெற்றது. அப்போது ஒலிபெருக்கியில் அதிக சத்தத்துடன் பாடல் ஒலிக்கப்பட்டுள்ளது. அப்போது அருகில் உள்ள கோழிப் பண்ணை ஒன்றில் சில கோழிகள் அதிர்ச்சியில் இறந்துள்ளன. இதையடுத்து கோழிப் பண்ணை உரிமையாளர் முகமது சபிர், ஒலி பெருக்கி (டி.ஜே) உரிமையாளரிடம் சத்தத்தை குறைக்கும்படி கூறியுள்ளார். ஆனால், அவர் கண்டுகொள்ளவில்லை. கோழிப்பண்ணை ஊழியரிடம் 3 முறை வேண்டுகோள் விடுத்தும், பலன் இல்லை.ஒலிபெருக்கியின் சத்தத்தால் ஏற்பட்ட அதிர்ச்சியில் கோழிப் பண்ணையில் இருந்த 140 கோழிகள் உயிரிழந்தன. இதனால் போலீஸ் கட்டுப்பாட்டு அறையை தொடர்பு கொண்டு முகமது சபிர் புகார் தெரிவித்தார்.

போலீஸார் வந்ததும் இழந்த கோழிகளுக்கு இழப்பீடு தருவதாக டி.ஜே. உரிமையாளர் கூறினார். போலீஸார் சென்றதும் அவர் தப்பிச் சென்றுவிட்டார். இறந்த கோழிகளைப் பரிசோதனைக்கு அனுப்பியதில், அதிக சத்தத்தால் ஏற்பட்ட அதிர்ச்சியில் இதய செயலிழப்பு ஏற்பட்டு கோழிகள் இறந்ததாக உடற்கூறு ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.இதுகுறித்து போலீஸார் வழக்குப் பதிவு செய்து டி.ஜே. உரிமையாளரை கைது செய்து அவரது டி.ஜே. வாகனத்தையும் பறிமுதல் செய்தனர். அவரிடம் தொடர்ந்து விசாரித்து வருகின்றனர்.

# மெட்ரோ ரயிலில் ஏப்ரலில் 90.18 லட்சம் பேர் பயணம்



சென்னை:மே. 04-
மெட்ரோ ரயிலில் ஏப்ரல் மாதத்தில் 90.18 லட்சம் பேர் பயணம் செய்துள்ளனர். சென்னையில் 2 வழித் தடங்களில் 54 கி.மீ. தொலைவுக்கு மெட்ரோ ரயில்கள் இயக்கப்படுகின்றன. இந்த ரயில்களில் தினசரி 3 லட்சம் பேர் பயணம் செய்கின்றனர்.

இந்நிலையில், மெட்ரோ ரயில்களில் நடப்பாண்டில் ஏப்ரல் மாதத்தில் 90.18,069 பேர் பயணம் செய்துள்ளனர். இம்மாதத்தில் அதிகபட்சமாக. ஏப்.2ம் தேதி 3,65,807 பேர் பயணம் செய்துள்ளனர். சிங்கார சென்னை அட்டையை பயன்படுத்தி 45.18,247 பேரும், பயண அட்டைகளை பயன்படுத்தி 25,659 பேரும், க்யுஆர் குறியீடு பயணச் சீட்டைப் பயன்படுத்தி 44,74,163 பேரும் பயணம் செய்துள்ளனர்.டிஜிட்டல் எஸ்விபி, க்யுஆர் குறியீடு பயணச்சீட்டு, வாட்ஸ் அப் மற்றும் சிங்கார சென்னை அட்டை பயணச் சீட்டுகளை பயன்படுத்தி மெட்ரோ ரயில்களில் பயணிப்பவர்களுக்கு 20 சதவீதம் கட்டணத் தள்ளுபடி வழங்கப்படுகிறது. மெட்ரோ ரயில் நிலைய கவுன்ட்டர்களில் வாங்கப்படும் காகித க்யூஆர் பயணச்சீட்டுகளுக்கு இந்த தள்ளுபடி கிடையாது என மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்

# திருவொற்றியூரில் மூதாட்டியிடம் ரூ.500 'டம்மி' நோட்டை கொடுத்து ஏமாற்றிய பெண் கைது

சென்னை:மே. 04-
திருவொற்றியூர் மார்க்கெட்டில் பழ வியாபாரம் செய்யும் மூதாட்டியிடம், சிறுவர்கள் விளையாடும் ரூ.500 டம்மி நோட்டைக் கொடுத்து ஏமாற்றி, பழம் வாங்கிச் சென்ற பெண்ணை போலீஸார் கைது செய்தனர்.ஆந்திர மாநிலம், திருப்பதியைச் சேர்ந்த ஜெயலட்சுமி (66) என்ற மூதாட்டி, சென்னை, திருவொற்றியூர் மார்க்கெட் பகுதியில் பழம் வியாபாரம் செய்து வருகிறார். கடந்த 29ம் தேதி, அவரிடம் ஒரு பெண் ரூ.200க்கு மாம்பழம் வாங்கிக் கொண்டு ரூ.500 நோட்டை கொடுத்தார். அதனை உண்மை என நம்பிய மூதாட்டி, மீதம் ரூ.300ஐ திருப்பிக் கொடுத்துள்ளார். பெண் சென்ற பிறகு நோட்டைச் சோதிந்த போது, அது சிறுவர்கள் விளையாடும் டம்மி ரூபாய் நோட்டு என்பது தெரியவந்தது.

தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்து மூதாட்டி கண்ணீர் விட்டு அழுத வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி, பொதுமக்களிடையே பெரும் அனுதாபத்தை ஏற்படுத்தியது. இதுகுறித்து, திருவொற்றியூர் போலீஸார் தீவிர விசாரணை நடத்தி, மூதாட்டியை ஏமாற்றிய எரணாவூரைச் சேர்ந்த பாக்கிய லட்சுமி (35) என்பவரை நேற்று கைது செய்தனர்.கைது செய்யப்பட்ட பாக்கியலட்சுமி போலீஸாரிடம் அளித்த வாக்கு மூலத்தில், 'தனது மகன் விளையாடிக் கொண்டிருந்த டம்மி நோட்டை எடுத்து தனது மணிபரஸில் வைத்து விட்டதாகவும், பர்ஸில் இருந்த ஒரிஜினல் ரூ.500 நோட்டுடன் இந்த டம்மி நோட்டும் கலந்திருந்ததை கவனிக்காமல், தெரியாமல் கொடுத்துவிட்டதாகவும்' அவர் கூறியுள்ளார். பாக்கியலட்சுமியின் விளக்கத்தைத் தொடர்ந்து, போலீஸார் சட்டப்படியான நடைமுறைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கும்மிடிப்பூண்டி: நிலத்தை ஆக்கிரமிப்பவர் மீது நடவடிக்கை கோரி காவல் நிலையம் முன்பு தற்கொலை முயற்சி




கும்மிடிப்பூண்டிமே. 04-
கும்மிடிப்பூண்டியை அடுத்த தேர்வழி கிராமத்தை சேர்ந்தவர் அருள் (40). இவரது பக்கத்து வீட்டில் வசித்து வருபவர் தமக்கு சொந்தமான நிலத்தை ஆக்கிரமிக்க முயற்சிப்பதாகவும், இது தொடர்பாக நிலத்தை அளவீடு செய்து தருமாறு வருவாய்த் துறையில் 2 முறை பணம் செலுத்தியும் நடவடிக்கை இல்லை என்றும், தற்போது தடுப்பு சுவர் அமைக்க செங்கற்களை இறக்கி பணிகள் தொடங்குவதால் காவல்துறையினர் உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மனு அளித்துள்ளார்.ஆனால் போலீஸார் நடவடிக்கை எடுக்காததால் அருள், கும்மிடிப்பூண்டி காவல் நிலையம் முன்பு மண்ணெண்ணெய் ஊற்றி தற்கொலைக்கு முயற்சித்தார். அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த காவல்துறையினர் அவரை தடுத்து நிறுத்தி உடலில் தண்ணீரை ஊற்றினர். தொடர்ந்து சமரச பேச்சுவாரத்தை நடத்திய காவல்துறையினர் உரிய நடவடிக்கை எடுப்பதாக கூறி அங்கிருந்து அவரை அனுப்பி வைத்தனர். இதனால் அங்கு சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# மேற்குவங்கத்தின் 15 வாக்குச் சாவடிகளில் மறுதேர்தல்: திரிணமூல் பாஜக தொண்டர்கள் மோதல்



கொல்கத்தா:மே. 04.
மேற்குவங்கத்தின் 15 வாக்குச் சாவடிகளில் நேற்று மறுதேர்தல் நடைபெற்றது. அப்போது ஆளும் திரிணமூல் காங்கிரஸ், பாஜக தொண்டர்களிடையே மிகப்பெரிய அளவில் மோதல் ஏற்பட்டது. மத்திய பாதுகாப்புப் படை வீரர்கள் தடியடி நடத்தி கூட்டத்தைக் கலைத்தனர்.மேற்கு வங்கத்தில் கடந்த 23, 29 ஆகிய தேதிகளில் 2 கட்டங்களாக சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற்றது. கடந்த 29ம் தேதி நடைபெற்ற இறுதிக் கட்ட தேர்தலின் போது மகரஹட் பஸ்சிம் மற்றும் டைமண்ட் ஹார்பர் தொகுதிகளின் 15 வாக்குச் சாவடிகளில் பல்வேறு முறைகேடுகள் நடைபெற்றதாக புகார்கள் எழுந்தன.இதைத் தொடர்ந்து மகரஹாட் பஸ்சிம் தொகுதிக்கு உட்பட்ட 11 வாக்குச் சாவடிகள், டைமண்ட் ஹார்பர் தொகுதிக்கு உட்பட்ட 4 வாக்குச் சாவடிகளில் நேற்று மறு தேர்தல் நடைபெற்றது. காலை 7 மணிக்கு வாக்குப் பதிவு தொடங்கியது. பொதுமக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து வாக்களித்தனர். மகரஹாட் பஸ்சிம் தொகுதியின் மறுவாக்குப் பதிவினை பார்வையிட பாஜக வேட்பாளர் கவுர் சுந்தர் கோஸ் சென்றார். ஏர்பூர் பகுதியில் அவரை திரிணமூல் காங்கிரஸ் தொண்டர்கள் சூழ்ந்து கோஷமிட்டனர். இதனால் அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது.டைமண்ட் ஹார்பர் தொகுதிக்கு உட்பட்ட பால்டா பகுதியில் திரிணமூல் காங்கிரஸ், பாஜக தொண்டர்கள் இடையே மிகப்பெரிய மோதல் ஏற்பட்டது. கூட்டத்தைக் கலைக்க பாதுகாப்புப் படை வீரர்கள் தடியடி நடத்தினர். இதில் பலர் காயம் அடைந்தனர். சிலர் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர். மத்திய பாதுகாப்புப் படை வீரர்களின் பலத்த பாதுகாப்பு 15 வாக்குச் சாவடிகளில் அமைதியாக வாக்குப் பதிவு நடைபெற்றது.பாஜக மூத்த தலைவர் சுவேந்து அதிகாரி கூறும்போது, "பல்வேறு வாக்குச் சாவடிகளில் ஆளும் திரிணமூல் காங்கிரஸார் முறைகேடுகளில் ஈடுபட்டனர். இதுதொடர்பாக தேர்தல் ஆணையத்திடம் புகார் மனுக்கள் அளிக்கப்பட்டன. எனினும் 15 வாக்குச் சாவடிகளில் மட்டுமே மறுதேர்தல் நடைபெறுகிறது. கூடுதல் வாக்குச் சாவடிகளில் மறு தேர்தல் நடத்தப்பட்டிருக்க வேண்டும்'' என்று தெரிவித்தார்.திரிணமூல் காங்கிரஸ் மூத்த தலைவர் சசி பன்ஜா கூறும்போது, "பாஜகவின் அழுத்தத்தால் 15 வாக்குச் சாவடிகளில் மறுவாக்குப்பதிவு நடைபெறுகிறது'' என்று தெரிவித்தார்.

காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை 15 வாக்குச் சாவடிகளிலும் விறுவிறுப்பாக வாக்குப் பதிவு நடைபெற்றது. இந்த வாக்குச்சாவடிகளில் 80 சதவீத வாக்குகள் பதிவாகின.திரிணமூல் காங்கிரஸார் மிரட்டுவதாக புகார்: சவுத் 24 பர்கானாஸ் மாவட்டம், பால்டா பகுதியை சேர்ந்த மக்கள் நேற்று சாலையில் திரண்டு திடீர் போராட்டம் நடத்தினர். அப்போது ஒரு பெண் கூறும்போது, "திரிணமூல் காங்கிரஸார் எங்கள் வீடுகளுக்கு வந்து மிரட்டல் விடுக்கின்றனர். எங்கள் பகுதிகளுக்கு மத்திய பாதுகாப்புப் படை வீரர்கள் பாதுகாப்பு அளிக்க வேண்டும்'' என்று தெரிவித்தார்.

மற்றொரு பெண் கூறும்போது, "திரிணமூல் காங்கிரஸை சேர்ந்த இஸ்ரபீல், சுஜாதித்தீன் ஷேக் ஆகியோர் எங்கள் பகுதி மக்களை மிரட்டுகின்றனர். அவர்களால் பெண்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கிறது'' என்று குற்றம் சாட்டினார்.

இதுகுறித்து தேர்தல் ஆணைய வட்டாரங்கள் கூறும்போது, "பால்டா பகுதியில் சிலர் பொதுமக்களுக்கு மிரட்டல் விடுத்ததாக புகார்கள் வந்துள்ளன. அவர்களை கைது செய்ய உத்தரவிடப்பட்டு உள்ளது'' என்று தெரிவித்தன. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பால்டா பகுதியில் மத்திய பாதுகாப்புப் படை வீரர்கள் குவிக்கப்பட்டு உள்ளனர்.





# புவனம் நியூஸ் மற்றும் அறக்கட்டளை சார்பில் ஆம்பூரில் ரயில் நிலையம் எதிரே மினரல் குடிநீர் வசதி

ஆம்பூர், மே.4-
புவனம் நியூஸ் மற்றும் அறக்கட்டளை சார்பில் ஆம்பூரில் சுட்டெரிக்கும் வெயில் தாக்கத்தை தணிக்க ரயில் நிலையம் எதிரே பொதுமக்களுக்கு மினரல் குடிநீர் வசதியை ஏற்படுத்தியது.

இந்நிகழ்விற்கு புவனம் நியூஸ் மற்றும் அறக்கட்டளை நிறுவனர் எஸ் எம் புவனேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. D. ராமு, K.விமல், D.சுரேஷ், ராஜவேலு, பாஸ்கர், ஏழுமலை, சரத், சுந்தர், பிரபாகரன், கேசவன், சுகன்ராஜ், ஆறுமுகம், வெங்கடேசன், சீனு, அண்ணாதுரை, சத்தியமூர்த்தி மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்* இதில் தினமும் திரளான பொதுமக்கள் பயணிகள் பயன் பெறுகின்றனர்

அத்தோடு புவனம் அறக்கட்டளை சார்பாக அமைக்கப்பட்ட குடிநீர் நிகழ்விற்கு அங்கிருந்த ஆட்டோ ஓட்டுநர்கள் பொதுமக்கள் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.




# கள்ளச் சந்தையில் காஸ் சிலிண்டர் விற்பனை: திருவான்மியூரில் தந்தை, மகன் கைது

சென்னை மே. 04-
திருவான்மியூரில் கள்ளச் சந்தையில் காஸ் சிலிண்டர்களை விற்பனை செய்த தந்தை, மகனை போலீஸார் கைது செய்து 40 சிலிண்டர்களை பறிமுதல் செய்தனர்.சென்னை, திருவான்மியூர், சித்திரை குளத் தெருவில் உள்ள ஒரு வீட்டில், வணிக மற்றும் வீட்டு உபயோக சிலிண்டர்கள் சட்ட விரோதமாகப் பதுக்கப்பட்டு, கள்ளச் சந்தையில் விற்பனை செய்யப்படுவதாகத் திருவான்மியூர் போலீஸாருக்கு ரகசியத் தகவல் கிடைத்தது. அதனடிப்படையில், நேற்று முன்தினம் அந்த வீட்டில் போலீஸார், சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது, அந்த வீட்டை ஒரு சிறிய கிடங்கு போல மாற்றி, அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஏராளமான சிலிண்டர்களைக் கண்டு போலீஸார் அதிர்ச்சியடைந்தனர். இது தொடர்பாக, அதே பகுதியைச் சேர்ந்த நீலமேகம் (80) மற்றும் அவரது மகன் குமார் (41) இருவரையும் கைது செய்து விசாரணை நடத்தினர்,

இருவரும் வீட்டு உபயோக சிலிண்டர்களைப் பதுக்கி, தட்டுப்பாடு நிலவும் சமயங்களில் தேவையுள்ளவர்களுக்கு ரூ.3 ஆயிரத்துக்கும், வணிகப் பயன்பாட்டு சிலிண்டர்களை ரூ.6,000 முதல் ரூ.7,000 வரை விற்று வந்தது விசாரணையில் அம்பலமானது.

தொடர்ந்து, வீட்டில் இருந்து 32 வீட்டு உபயோக சிலிண்டர்கள் மற்றும் 8 வணிகப் பயன்பாட்டு சிலிண்டர்கள் என மொத்தம் 40 சிலிண்டர்களை போலீ ஸார் பறிமுதல் செய்தனர். கைதான நீலமேகம் மற்றும் குமார் ஆகிய இருவரையும் திருவான்மியூர் போலீஸார், சிவில் சப்ளை சிஐடி போலீஸாரிடம் ஒப்படைத்தனர்

# டெல்லி அடுக்குமாடி குடியிருப்பில் தீ விபத்து: குழந்தை உள்பட 9 பேர் உயிரிழப்பு




புது டெல்லி: மே. 04-
டெல்லி, விவேக் விஹார் பகுதியில் உள்ள நான்கு மாடி குடியிருப்பில், இன்று (ஞாயிற்றுக்கிழமை) அதிகாலை ஏற்பட்ட தீ விபத்தில் 9 பேர் உயிரிழந்தனர், 4 பேர் காயமடைந்தனர். முதற்கட்ட விசாரணையின்படி, இந்த தீ விபத்து ஏசி வெடித்ததன் காரணமாகவே ஏற்பட்டிருக்கலாம் என்று தகவல் வெளியாகியுள்ளது. டெல்லியின் விவேக் விஹார் பகுதியில் அமைந்துள்ள நான்கு மாடி குடியிருப்பு கட்டடத்தில் இன்று அதிகாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் 9 பேர் உயிரிழந்தனர், 4 பேர் காயமடைந்தனர். தீ விபத்து குறித்த தகவல் கிடைத்ததும், 12 தீயணைப்பு வாகனங்கள் உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்தன. உயிரிழந்த ஒன்பது பேரில் ஐந்து பேரின் உடல்கள் கட்டிடத்தின் இரண்டாவது தளத்திலிருந்தும், மூன்று பேரின் உடல்கள் படிக்கட்டுப் பகுதியிலிருந்தும் மீட்கப்பட்டன. ஒருவரின் உடல் முதல் தளத்திலிருந்து மீட்கப்பட்டது.

முதல் தளத்தில் உயிரிழந்தவர் நவீன் என்பவரின் மனைவி ஷிகா ஜெயின் (45) என அடையாளம் காணப்பட்டுள்ளது. இரண்டாவது தளத்தில் சோட்டே லால் என்பவரின் மகன் அரவிந்த் (60), அனிதா ஜெயின் (58), நிஷாந்த் ஜெயின் (35), அஞ்சல் ஜெயின் (33) மற்றும் ஒன்றரை வயது குழந்தையான மாஸ்டர் ஆகாஷ் ஜெயின் ஆகியோர் சடலமாக மீட்கப்பட்டனர்.

மூன்றாவது தளத்தில் நிதின் ஜெயின் (50), அவரது மனைவி ஷெய்லி ஜெயின் (48) மற்றும் அவர்களது மகன் சம்யக் ஜெயின் (25) ஆகியோர் உயிரிழந்தனர். இதுவரை பத்துக்கும் மேற்பட்டோர் பத்திரமாக மீட்கப்பட்டுள்ள நிலையில், உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.இந்த விபத்து குறித்த தகவல் அதிகாரிகளுக்கு அதிகாலை 3.47 மணியளவில் கிடைத்தது. தகவல் கிடைத்ததும், காவல் துறை அதிகாரிகள் உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்தனர். சிறிது நேரத்திலேயே தீயணைப்பு வாகனங்களும் அங்கு வந்து சேர்ந்தன. காவல் துறையினரின் தகவலின்படி, கட்டிடத்தின் இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது தளங்களில் உள்ள குடியிருப்புகளைத் தீ சூழ்ந்துகொண்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.இந்தத் துயரச் சம்பவம் குறித்துப் பேசிய டெல்லி அமைச்சர் ரேகா குப்தா, இது மிகவும் வருத்தத்திற்குரிய ஒரு நிகழ்வு என்று குறிப்பிட்டார். மேலும், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்தார். காயமடைந்தவர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும், அவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திப்பதாகவும் அவர் கூறினார்.அத்துடன், அதிகாரிகள் நிலைமையை உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாகவும், தேவையான அனைத்து உதவிகளையும் செய்து வருவதாகவும் அவர் உறுதி அளித்தார்.

பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு இரங்கலைத் தெரிவித்ததுடன், காயமடைந்தவர்கள் விரைவில் குணமடையப் பிரார்த்திப்பதாகவும் கூறினார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161